# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண். 106/மா/2024**
**நாள் 09.10.2024**

திரு.T.R.ஸ்ரீநிவாசன், — மனுதாரர்
சென்னை–91

மண்டல அலுவலர், — எதிர் மனுதாரர்
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை.

சென்னை–600 091, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23 வது தெரு, கதவு எண்.3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R.ஸ்ரீநிவாசன் என்பவரின் 29.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு 106/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, கதவு எண்.3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R.ஸ்ரீநிவாசன் என்பவர் தனது 29.07.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண்.186க்கு உட்பட்ட பாலாஜி நகர், 24வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் மழைநீர் வடிகால் ஷட்டர்கள் அமைக்கவும், 21வது தெருவில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் கால்வாயை சரி செய்யுவும், 18வது தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலிமனையில் ஒரு கிணறு (Sunken well) அமைத்து மழைநீரை சேமிக்கவும், மழை காலங்களில் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் பெருக்கு ஏற்படாவண்ணம் நீர்வளத்துறையிடம் அனுமதி பெற்று வீராங்கல் கால்வாயை சுத்தம் செய்யவும், தடுப்புச் சுவர் அமைக்கவும் வேண்டி பல புகார் மனுக்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் அளித்தும் இது வரை முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து தன் மனு மீது, உரிய விசாரணை மேற்கொண்டு, புகாரில் தெரிவித்துள்ள தனது குறைகளை நிவர்த்தி செய்ய உரிய ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.”

2) மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தனது 23.09.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | கோரிக்கை | பதில் விவரம் |
|---|---|---|
| 1) | ➢ பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 24 வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள மழைநீர் வடிகால்கள் சரியான வகையில் கட்டமைக்கப்படாமல், ஷட்டர் அமைக்காமல் உள்ளது குறித்தும், பாலாஜி நகர் 21வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால் உடைந்து உள்ளதை சரி செய்து கழிவுகளை அகற்றி, தொடர் இணைப்பு ஏற்படுத்திடவும், | ➢ பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 24வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள மழைநீர் வடிகால்கள் KfW திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு ஷட்டர்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதுடன் 30.09.2024க்கு முன்னர் முடிக்கப்படும் . பாலாஜி நகர் 21வது தெருவில் மழைநீர் வடிகால்வாயின் கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இது ரயில்வே துறையினரால் கட்டப்பட்டு அத்துறையின் அலுவலக கட்டிடம் வழியாக வீராங்கல் ஓடையில் இணைக்கப்பட்டுள்ளது. |
| | ➢ பாலாஜி நகர் 18வது தெருவின் கடைசியில் காலியாக உள்ள மாநகராட்சி நிலத்தில் ஒரு கிணறு (Sunken well) அமைத்து மழை நீரை மாநகராட்சியின் மழைநீர் வடிகால்துறை நேரடியாக வீராங்கல் கால்வாயில் விடாமல், சேமித்து நீர் ஆதாரத்தை சேமிக்க கோரியும் | ➢ பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 18வது தெருவில் கடைசியில் உள்ள வீராங்கல் ஓடையில் மழைநீர் வடிகால் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாய் வீராங்கல் ஓடையில் இணையும் இடத்தில் ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது. மண்டலம் 12, 13 மற்றும் 14வது மண்டலத்தில் உள்ள பல்வேறு தெருக்களில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள் வீராங்கல் ஓடையில் தான் இணைக்கப்பட்டுள்ளது. எனவே பல்வேறு தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை ஒரே இடத்தில் இணைத்து கிணறு அமைக்க இயலாத நிலையில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| | | ➢ நீர்வளத்துறைக்குச் சொந்தமான வீராங்கல் ஓடையினை தூர்வாரி சுத்தம் செய்து, தடுப்புச் சுவர் அமைத்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு தற்போது நீர்வளத்துறையினர் மூலம் வீராங்கல் ஓடையினை தூர் வாரி சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுபணித்துறைக்குச் சொந்தமான வீராங்கல் ஓடையானது மண்டலம் 12, 13 மற்றும் 14வது ஆகிய மண்டலங்களில் உள்ள பகுதிகளை இணைத்து பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் கலக்கிறது. இது நீர்வளத்துறை மூலம் பராமரிக்கப்பட்டு அத்துறையினர் மூலமே ஆண்டு தோறும் பருவ மழை வெள்ள மேலாண்மை பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மண்டலம் 12, 13 மற்றும் 14வது ஆகிய மண்டலங்களின் பகுதிகளை உள்ளடக்கிய வீராங்கல் ஓடையினை மண்டலம் 14ன் வசம் பராமரிக்க முடியாத நிலை உள்ளது என்று தெரிவித்துள்ளார். |

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.09.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 24.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

- பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 24-வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் மழைநீர் வடிகாலில் 2 ஷட்டர்கள் அமைத்துள்ளார்கள். இதனை இயக்கி சரிபார்த்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும். மீதமுள்ள 3 ஷட்டர்களை பருவ மழை காலத்திற்கு முன்பு விரைந்து அமைத்திட வேண்டும்.

- வெள்ள தடுப்புச் சுவர் அமைக்க நீர்வள ஆதாரத்துறையிடம் உரிய அனுமதி பெற்று வருகின்ற பருவ மழைக் காலத்திற்கு முன்பு மாநகராட்சி வெள்ள தடுப்புச் சுவர்களை அமைத்து தர வேண்டும்.

- 21வது தெருவில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் கால்வாயை சரி செய்யவும், 18வது தெருவில் காலியாக உள்ள மாநகராட்சி இடத்தில் இரண்டு கிணறு (Sunken well) அமைக்கவும்,

- மழைநீரை சேமிக்கவும் மழை காலங்களில் குடியிருப்பு பகுதிகளில் வெள்ள பெருக்கு ஏற்படா வண்ணம் வீராங்கல் கால்வாயை சுத்தம் செய்யவும்,

- நீர் வளத்துறையின் அனுமதி பெற்று வீராங்கல் கால்வாயினை தூர்வாரி திறந்தவெளியாக உள்ள பகுதியில் கான்கீரிட் தடுப்பு சுவர் அமைத்திடவும்.

- மெட்ரோ ரெயில் நிலையம் அருகில் மழைநீர் வடிகால் அமைக்கப்படவில்லை.

மேற்காணும் எனது கோரிக்கைகள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தாலும், இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே எதிர் வரும் மழை காலத்திற்குள் இவைகளை முடித்து தருமாறு இம்முறை மன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். எனது மனு தொடர்பான புகைப்படங்களை ஆதாரமாக இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்".

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் 24.09.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தங்களது வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளனர்.

<u>1) மனுதாரரின் கோரிக்கை:</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 24 வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள மழை நீர் வடிகால்கள் சரியான வகையில் கட்டமைக்கப்படாமல் ஷட்டர்கள் அமைக்காமல் உள்ளது மற்றும் பாலாஜி நகர் 21வது தெருவில் உள்ள மழைநீர்வடிகால் உடைந்து உள்ளதை சரி செய்து கழிவுகளை அகற்றி தொடர் இணைப்பு எற்படுத்த வேண்டும்.

<u>பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14இன் பதில் விவரம்:</u>

வீராங்கல் ஓடையில் இணையும் இடத்தில் 2ஷட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 ஷட்டர்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பபட்ட பாலாஜி நகர், 24வது தெரு, வியாச வித்யாலயா பள்ளி அருகில் உள்ள மழைநீர் வடிகால்கள் KFW திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு ஷட்டர்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது இப்பணி 30.09.2024க்கு முன்னர் முடிக்கப்படும். மேலும் பாலாஜி நகர் 21வது தெருவில் மழைநீர் வடிகால்வாயின் கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இது இரயில்வே துறையினரால் கட்டப்பட்டு அத்துறையின் அலுவலக கட்டிடம் வழியாக வீராங்கல் ஓடையில் இணைக்கப்பட்டுள்ளது,

**2) மனுதாரரின் கோரிக்கை:**

பாலாஜி நகர் 18வது தெருவின் கடைசியில் காலியாக உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு கிணறு (Sunkenwell) அமைத்து மழைநீரை, மாநகராட்சியின் மழைநீர்

வடிகால்துறை நேரடியாக வீராங்கல் கால்வாயில் விடாமல், சேமித்து நீர்ஆதாரத்தை சேமிக்க வேண்டும்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14இன் பதில் விவரம்:**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர் 18வது தெருவில் கடைசியில் உள்ள வீராங்கல் ஓடையில் மழைநீர் வடிகால் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் 12, 13, மற்றும் 14வது மண்டலத்தில் உள்ள பல்வேறு தெருக்களில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள் வீராங்கல் ஓடையில் தான் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, பல்வேறு தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை ஒரே இடத்தில் இணைத்து கிணறு அமைக்க இயலாத நிலை உள்ளது. மனுதாரரின் வீட்டின் அருகே மழைநீர் வடிகால்வாய் ஒன்று அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3) மனுதாரரின் கோரிக்கை**

நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி வீராங்கல் கால்வாயில் உள்ள கழிவுகளை தூர்வாரி திறந்த வெளியாக உள்ள பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர் அமைத்திட நடவடிக்கை எடுத்திடுமாறும் அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14இன் கட்டுபாட்டின் கீழ் நிர்வகித்திட நீர்வளத்துறைக்கு கடிதம் அனுப்பி உரிய அனுமதி பெற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து தூர்வாரி தடுப்புச் சுவர் அமைத்திட வேண்டுதல்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14இன் பதில் விவரம்:**

நீர்வளத்துறைக்கு சொந்தமான வீராங்கல் ஓடையினை தூர்வாரி சுத்தம் செய்து தடுப்புச் சுவர் அமைத்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14-இன் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு தற்போது நீர்வளத்துறையினர் மூலம் வீராங்கல் ஓடையினை தூர்வாரி சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்வளத்துறைக்கு தடுப்புச் சுவர் அமைக்க அனுமதி வேண்டி கடிதம் அனுப்பப்படும். அத்துறையிடம் அனுமதி பெற்றவுடன் தடுப்புச் சுவர் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான வீராங்கல் ஓடையானது மண்டலம் 12,13 மற்றும் 14 ஆகிய மண்டலங்களின் பகுதிகளை இணைத்து சென்று பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் கலக்கிறது. இது நீர்வளத்துறை மூலம் பராமரிக்கப்பட்டு அத்துறையினர் மூலமே ஆண்டுதோறும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மண்டலம் 12,13 மற்றும் 14வது ஆகிய மண்டலங்களின் பகுதிகளை உள்ளடக்கிய வீராங்கல் ஓடையினை மண்டலம் 14-இன் வசம் பராமரிக்க இயலாத நிலை உள்ளது.

4. மெட்ரோ ரெயில் நிலையம் அருகில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. மேற்கண்ட பணிகள் ஒரு மாத கால அவகாசத்தில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்"

**மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்குப்பின் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.**

சென்னை புழுதிவாக்கத்தைச் சேர்ந்த திரு.T.R.ஸ்ரீநிவாசன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186க்கு உட்பட்ட பாலாஜி நகர், 24வது தெரு வியாச வித்யாலயா பள்ளி அருகில் மழைநீர் வடிகால்வாய் ஷட்டர்கள் அமைக்கவும், 18வது தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி மனை இடத்தில் ஒரு கிணறு (Sunken well) அமைத்து மழைநீரை சேமிக்கவும் நீர்வளத்துறைக்கு சொந்தமான வீராங்கல் ஓடையில் அத்துறையிடம் அனுமதி பெற்று, வெள்ள தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு எண்.186க்கு உட்பட்ட வியாச வித்யாலயா பள்ளி அருகில் KfW திட்டத்தின் கீழ் 5 ஷட்டர்கள் அமைக்கும் பணியில் தற்போது 2 ஷட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 3 ஷட்டர்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12, 13, மற்றும் 14 ஆகியவற்றில் உள்ள பல்வேறு தெருக்களில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கால்வாய்கள் வீராங்கல் ஓடையில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எல்லா வாய்கால்களையும் இணைத்து ஒரே இடத்தில் கிணறு (Sunken well) அமைக்க இயலாத நிலை உள்ளது என்றும் நீர்வளத்துறைக்கு சொந்தமான வீராங்கல் ஓடையானது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12, 13, மற்றும் 14 ஆகிய மண்டலங்களின் பகுதிகளை இணைத்து பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் கலக்கிறது என்றும் இதனை அத்துறை பராமரித்து வருகின்ற நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14 இன் மூலம் பராமரிக்க இயலாத நிலை உள்ளது என்றும், இருப்பினும் நீர்வளத்துறைக்கு வெள்ள தடுப்புச்சுவர் அமைக்க அனுமதி வேண்டி கடிதம் அனுப்பப்படும் என்றும் அனுமதி பெறப்பட்டவுடன் வெள்ள தடுப்புச் சுவர் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் மேற்கண்ட பணிகள் அனைத்தும் ஒரு மாத கால அவகாசத்தில் முடிக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவிசெயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் தெரிவித்துள்ள கோரிக்கைகள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளவாறும், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு வெள்ள தடுப்புச் சுவர் அமைக்க நீர்வளத்துறையிடம் உடனடியாக அனுமதி பெறவும், வார்டு 186 க்கு உட்பட்ட பாலாஜி நகர் வியாச வித்யாலயா பள்ளி அருகில் மீதமுள்ள 3 ஷட்டர்கள் அமைக்கும் பணியினையும் வரும் பருவ மழை காலத்திற்குள் முடித்து அதன் அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்புமாறு மண்டலம் 14இன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. T.R.ஸ்ரீநிவாசன்,
மனை எண்.86, கதவு எண்.3/2,
பாலாஜி நகர் 23 வது தெரு,புழுதிவாக்கம்,
சென்னை–600 091.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64 புழுதிவாக்கம் மெயின் ரோடு,
மடிப்பாக்கம், சென்னை–91

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).